# நடப்பு நிகழ்வுகள் மார்ச் 14.03.2018

- பெண்களுக்கு புதிய முயற்சிகளை ஏற்படுத்தி தரவும், தற்போதுள்ள வணிகங்களை விரிவாக்குவதற்கு அவர்களுக்கு உதவும் வகையில் விகாஷ் ஷி ப்ளஸ் (Vikash she plus) என்ற திட்டத்தின் கர்நாடகா கிராமீன் வங்கி துவக்கியுள்ளது.
- 100% சூரிய ஒளி சக்தியால் இயங்கும் முதல் யூனியன் பிரதேசம் என்ற பெருமையை டையூ பெற்றுள்ளது.
- பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மாக்ரான் மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோயும் இணைந்து உத்திரபிரதேசம் மாநிலம் "மிராஸ்பூர்" (nirazpur) மாவட்டத்தில் 100mw திறன் கொண்ட சூரிய மின் சக்தி உற்பத்தி நிலையத்தை தொடங்கி வைத்துள்ளார்.
- இந்திய விமானப் படையால் நடத்தப்படும் பல் நாட்டு பேரீடர் மீட்பு பயிற்சி "Samvedna" கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் தொடங்கியுள்ளது. இந்த பயிற்சியில் பங்களாதேஷ் இலங்கை, UAE மற்றும் மியான்மர் ஆகிய நாடுகள் பங்கேற்றுள்ளன.
- உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் மென் பொருள் நிறுவனமாக (Fastest Growing IT services Brand) 'TCS' நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- உலகின் 4வது அதிகமுள்ள தனிமமாக கருதப்பட்டதும், இதுவரை பார்காததுமான வைரத்தில் உள்ள "கால்சியம் சிலிகேட் பெர்வோக்சைட்" (Calcuim Silicate Pervoksite - casios) தனிமத்தை தென் ஆப்ரிக்காவில் புவியின் கவசப் (mantle) பகுதியில் கண்டறிந்துள்ளனர்.
- தனக்கென தனியாக ஓர் டிஜிட்டல் புத்தக அமைப்பை உருவாக்கிய முதல் மாநிலம் என்ற பெருமையை "ஹரியானா மாநிலம் பெற்றுள்ளது. "மோரி - இ- புஷ்தக்" (Mori-e-pustak) என்ற மொபைல் செயலியை ஹரியானா மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கழகம் உருவாக்கியுள்ளதன் மூலம் இந்த பெருமையை பெற்றுள்ளது.
- இத்தாலி நாட்டின் முதல் கறுப்பின செனட்டராக நைஜீரியாவை பூர்விகமாக கொண்ட "டோணி இ வோபி" (Toni Ewobi) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளர்.
- இஸ்ரேல் நாட்டின் IIB பெர்லின் சர்வதேச சுற்றுலா கண்காட்சியில் 'இந்தியா" சிறந்த காட்சியமைப்பாளர் விருதை (Best – Exhibitor Award) பெற்றுள்ளது.
- பெங்களூரிலுள்ள நவீன அறிவியல் ஆராய்ச்சிக்கான ஜவஹர்லால் நேரு ஆராய்ச்சி மைய (JNCASR) ஆராய்ச்சியாளர்கள், நல் மின் கடந்து திறமையையும், 2400 – 4250$^{0}$C வெப்ப நிலையில் குறைவான வெப்பக் கடத்தும் திறணையும் வெள்ளிக் கொணரவல்ல "சில்வர் காப்பர் டெல்லூரைட்" (Agcutel) கூட்டும் சேர்மத்தை கண்டறிந்துள்ளார்.
- 2030 ம் ஆண்டுக்கு காசநோயை ஒழிப்பது தொடர்பான உலக மாநாடு (End TB Summit) "டெல்லியில்" தொடங்கியது. இதனை மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் மற்றும் தென் கிழக்கு ஆசிய உலக சுகாதார நிறுவனம் (WHO SEARO) இணைந்து நடக்கிறது.